**முலடியன பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முலடியன பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, முலடியன பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான கட்டடங்களை முன்னேற்றுவதற்காக மேற் கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,302,065 தொகையினை மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்த கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான கேட்போர் கூடத்திற்கு ரூபா 339,660 தொகை செலவிடப்பட்டு | | |

| | | |
|---|---|---|
| கொள்வனவு செய்யப்பட்டிருந்த 500 பிலாஸ்டிக் கதிரைகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (இ) சபைக்குச் சொந்தமான தெய்யந்தர வாராந்த சந்தைக் கட்டடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 09 செயற்திட்டங்கள் தொடர்பாக செலுத்த வேண்டியிருந்த ரூபா 866,535 தொகைக்காக கடன் கொடுத்தோரின் கீழ் குறைவாக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த பலவின செலவுகளுக்கான ரூபா 76,465 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய பங்பளிப்புத் தொகை ரூபா 1,193,249 தொகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி ரூபா 49,388,397 தொகை மற்றும் துணைப் பதிவேடு / அட்டவணைகளின் படி பெறுமதி ரூபா 44,972,927 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 4,415,470 இற்கான வித்திசயாசம் ஒன்று காணப்பட்டது. | அடுத்த கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1999 ஆண்டு முதல் மாற்றமின்றி கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் ரூபா 36,289 இற்கான | 1999 ஆண்டு முதல் காணப்படும் வித்தியாசம் ஒன்று என்பதால் | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கினை தீர்த்தல் முடியாமல் உள்ளது என. |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றிதழ் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 146,033,445 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வுக்கு தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | ஆவணங்கள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 38,303,419 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 31,153,682 தொகையாகும்.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 82,719 இற்கான ஏக்கர் வரி நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | ஆதன உரிமையாளர்களை சரியாக இனங்காண்பதற்கு கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது என மற்றும் அதன் படி பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 656,384 இற்கான கடை வாடகை நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 220,995 இற்கான குத்தகை நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலகு ஒன்றின் பெறுமதி ரூபா 1,000 வீதமான 5,000 உலர் உணவுப் பொதிகள் தலைவர் உட்பட 13 அங்கத்தவர்கள் இடையே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ஒரு பொதியின் பெறுமதி ரூபா 980 ஆகும். அவ்வாறு பொதிகள் தயாரிக்கப்பட்ட பின்னர் மீதியாக காணப்பட்ட 5,000 கிலோ கிராம் அரிசி, 5,000 கிலோ கிராம் பருப்பு, 5,000 டின் மீன்கள் தொடர்பான விநியோக விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உணவுப் பொருட்கள் 13 வட்டாரங்களை சேர்ந்த மந்திரிமார்களுக்கு இடையே விநியோகிக்கப்பட்டது என. | அனைத்து உணவுப் பொருட்களும் முறையான திட்டம் ஒன்றின் படி விநியோகிக்கப்பட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையின் நிரந்தர பதவியணி சம்பளம் என செலுத்தப்பட்டிருந்த ரூபா 30,797,112 தொகைக்காக தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து மீளளிப்பு செய்யப்பட்ட தொகை ரூபா 29,730,542 தொகையாக காணப்பட்டதுடன், அதன்படி, ரூபா 1,066,570 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | வெற்றிடங்கள் மற்றும் புதிதாக ஆள் சேர்க்கப்பட்ட பதவிகளுக்காக சம்பள மீளளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என. | சம்பள மீளளிப்புக்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |